ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கள்வன்கொல் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கள்வன்கொல் ॥

திருவாலி - 3

‡கள்வன்கொல் யான் அறியேன்⋆ கரியான் ஒரு காளை வந்து⋆
வள்ளி மருங்குல் என்தன்⋆ மட மானினைப் போதவென்று⋆
வெள்ளி வளைக் கைப் பற்றப்⋆ பெற்ற தாயரை விட்டகன்று⋆
அள்ளலம் பூங்கழனி⋆ அணியாலி புகுவர் கொலோ! (1)

பண்டிவன் ஆயன் நங்காய்!⋆ படிறன் புகுந்து⋆ என் மகள் தன்
தொண்டையஞ்செங்கனிவாய்⋆ நுகர்ந்தானை உகந்து⋆ அவன் பின்
கெண்டையொண் கண் மிளிரக்⋆ கிளி போல் மிழற்றி நடந்து⋆
வண்டமர் கானல் மல்கும்⋆ வயல் ஆலி புகுவர் கொலோ (2)

அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய்!⋆ அரக்கர் குலப் பாவை தன்னை⋆
வெஞ்சின மூக்கரிந்த⋆ விறலோன் திறம் கேட்கில் மெய்யே⋆
பஞ்சிய மெல்லடி⋆ எம் பணைத் தோளி பரக்கழிந்து⋆
வஞ்சியந் தண் பணை சூழ்⋆ வயல் ஆலி புகுவர் கொலோ (3)

ஏதவன் தொல் பிறப்பு⋆ இளையவன் வளை ஊதி⋆ மன்னர்
தூதுவன் ஆயவன் ஊர்⋆ சொலுவீர்கள்! சொலீர் அறியேன்⋆
மாதவன் தன் துணையா நடந்தாள்⋆ தடம் சூழ் புறவில்⋆
போது வண்டாடு செம்மல்⋆ புனல் ஆலி புகுவர் கொலோ (4)

தாய் எனை என்றிரங்காள்⋆ தடந் தோளி தனக்கமைந்த
மாயனை⋆ மாதவனை மதித்து⋆ என்னை அகன்ற இவள்⋆
வேய் அன தோள் விசிறிப்⋆ பெடை அன்னம் என நடந்து⋆
போயின பூங்கொடியாள்⋆ புனல் ஆலி புகுவர் கொலோ (5)

‡என் துணை என்றெடுத்தேற்கு⋆ இறையேனும் இரங்கிற்றிலள்⋆
தன் துணையாய என்தன்⋆ தனிமைக்கும் இரங்கிற்றிலள்⋆
வன் துணை வானவர்க்காய்⋆ வரம் செற்றரங்கத்துறையும்⋆
இன் துணைவன்னொடும் போய்⋆ எழில் ஆலி புகுவர் கொலோ (6)

www.prapatti.com

அன்னையும் அத்தனும் என்று⋆ அடியோமுக்கிரங்கிற்றிலள்⋆
பின்னை தன் காதலன் தன்⋆ பெருந் தோள் நலம் பேணினளால்⋆
மின்னையும் வஞ்சியையும்⋆ வென்றிலங்கும் இடையாள் நடந்து⋆
புன்னையும் அன்னமும் சூழ்⋆ புனல் ஆலி புகுவர் கொலோ! (7)

முற்றிலும் பைங்கிளியும்⋆ பந்தும் ஊசலும் பேசுகின்ற⋆
சிற்றில் மென் பூவையும் விட்டகன்ற⋆ செழுங்கோதை தன்னை⋆
பெற்றிலேன் முற்றிழையைப்⋆ பிறப்பிலி பின்னே நடந்து⋆
மற்றெல்லாம் கைதொழப் போய்⋆ வயல் ஆலி புகுவர் கொலோ (8)

காவியம் கண்ணி எண்ணில்⋆ கடி மா மலர்ப் பாவை ஒப்பாள்⋆
பாவியேன் பெற்றமையால்⋆ பணைத் தோளி பரக்கழிந்து⋆
தூவி சேர் அன்னம் அன்ன நடையாள்⋆ நெடுமாலொடும் போய்⋆
வாவியந் தண் பணை சூழ்⋆ வயல் ஆலி புகுவர் கொலோ (9)

‡தாய் மனம் நின்றிரங்கத்⋆ தனியே நெடுமால் துணையா⋆
போயின பூங்கொடியாள்⋆ புனல் ஆலி புகுவர் என்று⋆
காய் சின வேல் கலியன்⋆ ஒலிசெய் தமிழ் மாலை பத்தும்⋆
மேவிய நெஞ்சுடையார்⋆ தஞ்சம் ஆவது விண்ணுலகே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com